# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:147** **தேதி:-26.06.2014**

## கூட்டு நடவடிக்கைக் குழு செய்திகளும் மற்றும் பிற செய்திகளும்

அன்பார்ந்த தோழர்களே,

கூட்டு நடவடிக்கைக் குழுவுடன் எந்த ஒரு பேச்சு வார்த்தையும் நடத்த முடியாது என நிர்வாகம் உருதியன நிலை எடுத்துள்ளது என்பதை நாம் முதலில் தெரிவித்திருந்தோம். BSNL ஊழியர் சங்கம் மற்றும் NFTE ஆகிய சங்கங்களின் தலைவர்கள் 26.06.2014 அன்று மனித வள இயக்குனர் திரு A.N.ராய் அவர்களை சந்தித்து கூட்டு நடவடிக்கைக் குழுவினை பேச்சு வார்த்தைக்கு அழைக்க வேண்டும் என்று வாதாடினர். தலைவர்களின் வாதத்தை ஏற்றுக் கொண்ட மனித வள இயக்குனர் கூட்டு நடவடிக்கைக் குழுவினை பேச்சு வார்த்தைக்கு அழைக்க ஏற்று கொண்டார். BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலரும் கூட்டு நடவடிக்கைக் குழுவின் அமைப்பாளருமான தோழர் P.அபிமன்யு மற்றும் NFTE சங்கத்தின் பொது செயலரும் கூட்டு நடவடிக்கைக் குழுவின் தலைவருமான தோழர் சந்தேஸ்வர் சிங் ஆகியோருக்கு இது தொடர்பான கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டம் அதன் தலைவர் தோழர் சந்தேஸ்வர் சிங் தலைமையில் 26.06.2014 அன்று நடைபெற்றது. கூட்டு நடவடிக்கைக் குழுவின் அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு அனைவரையும் வரவேற்றதுடன், 09.04.2014 அன்று கூட்டு நடவடிக்கைக் குழுவின் சார்பாக நாம் கோரிக்கை மனு கொடுத்ததற்கு பின் நடைபெற்ற நிகழ்வுகளை தெரிவித்தார். 27.06.2014 அன்று 30 அம்ச கோரிக்கைகள் தொடர்பாக மனித வள இயக்குனருடன் நடைபெற உள்ள பேச்சு வார்த்தையில் கலந்துக் கொள்வது என ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. கூட்டு நடவடிக்கைக் குழுவின் அடுத்த கூட்டம் 17.07.2014 அன்று நடத்த முடிவு செய்யப்பட்டது.

மேலும் அனைத்து மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிலும் கூட்டு நடவடிக்கைக் குழு உருவாக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. BSNL ஊழியர் சங்கத்தின் மாநில/மாவட்ட செயலாளர்கள் கூட்டு நடவடிக்கைக் குழுவில் உள்ள சங்கங்களை அணுகி மாநில மாவட்ட கூட்டு நடவடிக்கைக் குழுக்களை விரைவில் உருவாக்க வேண்டும்.

**25.06.2014 அன்று FORUMத்தின் கூட்டம் நடைபெற்றது:-**

25.06.2014 அன்று நடைபெற்ற FOURM OF BSNL ASSOCIATIONS AND UNIONS கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:-

அ) BSNLன் புத்தாக்கம் தொடர்பாக விவாதிக்க மத்திய தொலை தொடர்பு அமைச்சருடன் விரைவில் சந்திப்பது.

ஆ) BSNL ஓய்வூதியர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பின் அடிப்படையில் ஓய்வூதிய மாற்றம் தொடர்பாக செலவினங்களுக்கான இலாகா கேட்ட கேள்விகளுக்கு தொலை தொடர்பு துறை இது வரை பதிலளிக்காததால், தொலைதொடர்பு துறை செயலரை விரைவில் சந்தித்து செலவினங்களுக்கான இலாகாவின் கேளிவிகளுக்கு உடனடியாக பதிலளிக்க வற்புறுத்துவது.

**தேசியகவுன்சிலின் நிலைக்குழு கூட்டம்:-**

மாற்றி அமைக்கப்பட்ட நிலைக்குழுவின் கூட்டம் 26.06.2014 அன்று நடைபெற்றது. 29 மற்றும் 30ஆவது தேசியகவுன்சிலில் விவாதிக்கப்பட்ட பிரச்சனைகள் தொடர்பாக

பரிசீலிக்கப்பட்டது. 6ஆவது உறுப்பினர் சரிபார்ப்பிற்கு முன் நடைபெற்ற நிலைக்குழுவின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட பிரச்சனைகளை 22.07.2014 அன்று நடைபெற உள்ள நிலைக்குழு கூட்டத்தில் விவாதிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் விரைவில் வெளியிடப்படும்.

**நக்சலைட் பாதிக்கப்பட்ட இடங்களில் BSNLன் 3567 கோடி ரூபாய் திட்டத்திற்கு அனுமதி:-** ECONOMIC TIMES பத்திரிக்கை செய்தியின் அடிப்படையில், நக்சலைட் பாதிக்கப்பட்ட இடங்களில் BSNLன் 3567 கோடி ரூபாய் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி உள்ளது. மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் ஊடுருவலால் பாதிக்கப்பட்டுள்ள ஒன்பது மாநிலங்களில் மொபைல் சேவைகளை தருவதற்கான BSNLன் 3567.68 கோடி ரூபாய்க்கான திட்டத்திற்கு மத்திய தொலை தொடர்பு அமைச்சர் திரு ரவிசங்கர் பிரசாத் ஒப்புதல் அளித்துள்ளதாக அரசாங்க தகவலின் அடிப்படையில் எகானாமிக்ஸ் டைம்ஸ் பத்திரிக்கை தகவல் வெளியிட்டுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(S.செல்லப்பா)**

**மாநில செயலாளர்.**